08.07.2025 HMOP NO. 52/2024

சாட்சி: PW 1 முத்துகண்ணன்

சாட்சி அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டார்.

**குறுக்கு விசாரணை:**

1. நான் எனது மனைவிக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு மற்றும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்த நிருபணவாக்குமூலத்தில் கண்டுள்ள விவரங்களை நான் கூறினேன் என்றால் சரிதான். நிருபணவாக்குமூலத்திலும், மனுவிலும் நான் தான் எனது மனைவி மற்றும் குழந்தையை 3 வருடமாக பிரிந்து உள்ளதாக கூறினேன் என்றால் சரிதான். நான் அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பில் எனது மனைவிதான் என்னையும் எனது குழந்தையும் பிரிந்து வாழ்ந்து வருவதாக நான் சொல்லியிருந்தால் அது தவறு என்று சொன்னால் என்னைதான் அவர் பிரிந்ததாக சொல்லியுள்ளேன். என்னை திருமணம் செய்த மறுமாதமே எனது மனைவி பிரிந்து சென்றுவிட்டதாக மனுவில் சொல்லியுள்ளதில் தேதி மாதம் குறிப்பிட்டு சொல்லவில்லை என்று சொன்னால் சரிதான். அவர் எந்த காரணத்திற்க்காக என்னை விட்டு பிரிந்து சென்றார் என்று காரணம் குறிப்பிட்டு சொல்லப்படவில்லை என்று சொன்னால் சரிதான்.

2. என்னிடம் பிரச்சனை செய்து விட்டு அடிக்கடி அவரது தாயார் வீட்டிற்கு சென்று விடுவார் என் நான் சொல்லியுள்ள நிலையில் அவ்வாறு அவர் அவரது தாயார் வீட்டிற்கு சென்ற பின்பு சமாதான நடவடிக்கை எதுவும் என்னால் மேற்கொள்ளப்பட்டதா என்றால் இல்லை. அவ்வாறு கோபித்து கொண்டு செல்பவரை நான் சென்ற அழைத்து வருவேனா அல்லது அவராகவே வருவாரா என்ற விவரத்தை நான் மனுவில் குறிப்பிட்டு மனுவில் சொல்லவில்லை என்றால் சரிதான். எனது மனைவியின் அக்கா மகன் பிரகாஷ் எனது மனைவியின் தம்பி ஊர்காவலன், மற்றொரு தம்பி அழகர்சாமி என்னை என் வீட்டில் வைத்து அடித்து என் குழந்தைகளை இழுத்துச்சென்றதாக சொல்லியுள்ளது எந்த மாதம் தேதி என்று குறிப்பிட்டு சொல்லப்பட்டுள்ளதா என்றால் இல்லை.

3. வீடு தேடி வந்து அடித்து எனது குழந்தைகளை இழுத்துச்சென்றதற்க்காக என்னால் புகார் எதுவும் கொடுக்கப்பட்டதா என்றால் இல்லை, லாக்டவுன் என்பதால் புகார்

கொடுக்கவில்லை. என் மீது எனது மனைவி 42 முறை காவல்நிலையத்தில் புகார் கொடுத்ததாக சொல்லி உள்ளநிலையில் ஆனால் மனுவில் 1 புகார் குறித்து மட்டுமே சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். எனது மனைவி சீர்வரிசை சாமான் மற்றும் நகைகளை எடுத்துச்சென்ற தேதி, மாதம், வருடம் மனுவில் சொல்லவில்லை என்றால் சரிதான். எவ்வளது மதிப்புள்ள சீர்சாமான் மற்றும் எத்தனை பவுன் நகை எடுத்துச்சென்றார் என்ற விவரத்தை என் மனுவில் சொல்லவில்லை என்றால் சரிதான்.

4. எனது மனைவியுடன் சேர்ந்து வாழ வரச்சொல்லி ஒரு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினேன் என்று சொன்னால் இல்லை, பிரிந்து போவதாகத்தான் வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினேன். ஆனால் எனது மனுவிலும், நிருபணவாக்குமூலத்திலும் எனது மனைவியை சேர்ந்து வாழ வரச்சொல்லி தான் வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினேன் என்று சொல்லியிருந்தால் அது தவறு. மனுவில் எனது மனைவியுடன் வாழ பலமுறை முயற்சி செய்தேன் என்று சொல்லி உள்ள நிலையில் நான் சேர்ந்து வாழக்கோரி மனு ஏதும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. சட்ட உதவி மையத்தில் அவரை சேர்ச்துவைக்கக்கோரி மனு ஏதும் கொடுத்தேனா என்றால் இல்லை. காவல் நிலையில் எனது மனைவியை சேர்த்து வைக்ககோரி எதும் மனு கொடுத்தேனா என்றால் இல்லை.

5. நான் மனுவில் சொல்லியுள்ளது போல எந்த விசயமும் நடக்கவில்லை என்றும் நான் திருமணத்திற்கு முன்பு நன்றாக குடிபழக்கம் உள்ளவர் என்றும் அதை மறைத்து நான் எதிர்மனுதாரரை திருமணம் செய்தேன் என்று சொன்னால் சரியல்ல. திருமணத்தின் போது எனது மனைவியின் பெற்றோர் எனது மனைவிக்கு 30 சவரன் நகை போட்டதாகவும், ரூ.2 லட்சம் மதிப்புள்ள சீர்சாமன்கள் மற்றும் எனக்கு 1 சவரன் மோதிரம், 2 பவுன் செயின், 3 பவுன் கைசெயின் போட்டார்கள் என்றால் சரியல்ல, எனக்கு 1 பவுனுக்குள்ளும் மொத்தமாக 7 பவுனும் தான் நகைப்போடப்பட்டது. திருமணம் ஆன 6 மாதம் கழித்து எனது மனைவியின் பெற்றோர் எனக்கு தனியாக 5 பவுன் நகை போட்டார்கள் என்றால் இல்லை, அவர்கள் திருமணத்திற்கு பின்பு வரவேயில்லை.

6. திருமணம் ஆன 1 வாரம் மட்டும் தான் நான் குடிக்காமல் இருந்தேன் என்றும் அதன் பின்புதான் நான் முழுநேர குடிகாரன் என்று என் மனைவிக்கு தெரியவந்தது என்று சொன்னால் சரியல்ல. நான் தினமும் குடித்துவந்து எனது மனைவியை கொடுரமாக

அடிப்பது வழக்கம் என்று சொன்னால் சரியல்ல, அவர் என்னோடு பேசுவதே இல்லை, திருமணம் முடித்து ஒரு வாரத்தில் அவர் வீட்டே விட்டு சென்று விட்டார். வீட்டை விட்டு சென்றவர் எப்போது திரும்ப வந்தார் என்றால் ஒருமாதம் கழித்து வந்தார், நான் கூப்பிடவில்லை அவரே வந்தார். திருமணமான ஒருவாரத்திற்கு பிறகு நான் குடித்துவிட்டு என் மனைவியை கொடுரமாக தாக்கியதால் தான் அவர் என்னைவிட்டு பிரிந்து சென்றுவிட்டார் என்று சொன்னால் சரியல்ல.

7. எனது மனைவி கர்பமாக இருந்த நிலையில் கூட அடித்து துண்புறுத்தினேன் என்று சொன்னால் சரியல்ல, அவர் அப்போது அவர் பெற்றோர் வீட்டிற்கு சென்று விட்டார். நான் குடித்துவிட்டு மோசமான வார்த்தையால் எனது மனைவியை தினமும் திட்டுவது வழக்கம் என்று சொன்னால் சரியல்ல, நான் அவரிடம் பேசுவதேயில்லை. எனது மாமியார் எனக்கு போட்ட 5 பவன் நகையை விற்றும், மனைவியிடம் இருந்து ரூ. 3 லட்சம் பணத்தை பெற்றுக்கொண்டு ரூ.5 மதிப்புள்ள பழைய காரை வாங்கி கொடுத்தார்கள் என்றும் அந்த காரையும் நான் குடிபோதையில் ஓட்டிச்சென்று விபத்து ஏற்படுத்தி வீனாக்கிவிட்டேன் என்று சொன்னால் சரியல்ல, அவர்கள் எனக்கு காரை வாங்கி கொடுக்கவில்லை. கடந்த 28.05.2019 அன்று இரவு உடல் நிலை சரியில்லாமல் எனது மனைவி வீட்டில் படுத்திருந்த நிலையில் வீட்டை விட்டு வெளியே விரட்டி நான் அவரை கொடுரமாக ரோட்டில்தாக்கி சித்ரவரை செய்தேன் என்று சொன்னால் சரியல்ல. வலி தாங்கமுடியாமல் என் மனைவி 100 க்கு தகவல் கொடுத்தார் என்று சொன்னால் சரியல்ல. அங்கு வந்த காவலர்களை நான் கெட்ட வார்த்தையால் திட்டி அவர்களை அடிக்கசென்றேன் என்றும் கொலைமிரட்டல் விடுத்தேன் என்று சொன்னால் சரியல்ல, அந்த பிரச்சனை எனக்கும் எனது சகோதரர்களுக்கும் நடந்த பிரச்சனை ஆகும்.

8. கடந்த 28.05.2019 ம் தேதி என் மனைவி கொடுத்த புகாரின் அடிப்படையில் நான் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டேன் என்று சொன்னால் 29.05.2019 ம் தேதி நானும் எனது சகோதரரும் புகாரின் அடிப்படையில் சிறையில் அடைக்கப்பட்டோம். எனது மனைவியை அடித்து காயப்படுத்தி அசிங்கப்படுத்தினாலும் என் மனைவி மனது கேட்காமல் என்னை பிணையில் எடுத்தார் என்று சொன்னால் சரியல்ல, நான் தான் வழக்கறிஞர் மூலமாக பிணையில் வெளியில் வந்தேன். அந்த வழக்கு இன்று வரையிலும்

தேவகோட்டை நடுவர் நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது என்றால் சரிதான். சிறையில் இருந்து வெளியில் வந்த பிறகு கொஞ்சநாள்கள் எனது மனைவியுடன் நன்றாக வாழ்ந்து வந்தேன் என்று சொன்னால் சரியல்ல. அதன் பிறகு தேவகோட்டையில் உள்ள கணவரை இழந்த பெண் ஜோதி என்பவருடன் தகாத உறவு ஏற்பட்டது என்று சொன்னால் சரியல்ல. அந்த ஜோதியுடன் நான் ஏற்படுத்திக் கொண்ட தகாத உறவால் எனது மனைவிக்கு வெறுப்பு வந்தது என்று சொன்னால் சரியல்ல. அந்த ஜோதிக்கு 2 மகன்கள் இருந்தாலும், அவரை எனது மனைவிக்கு தெரியாமல் ரகசிய திருமணம் செய்துகொள்ள முன் ஏற்பாடுகள் நடந்தது என்று சொன்னால் சரியல்ல, அவர் யார் என்றே எனக்கு தெரியாது.

9. ஜோதியுடான தொடர்பை விட்டுவிட்டு என்னுடன் சேர்ந்து வாழ வாருங்கள் என்று என் மனைவி என்னுடன் கேட்டார் என்று ெ சான்னால் சரியல்ல, ஜோதி யார் என்று எனக்கு தெரியாது. என் மனைவி ஜோதியை விட்டுவர சொன்னதால் நான் அவரை அடித்து உதைத்து கொடுரமாக தாக்கினேன் என்று சொன்னால் சரியல்ல. வீட்டில் துாங்கி கொண்டிருந்த எனது மனைவியின் வலது காலை கட்டையால் அடித்து உடைத்து அவரை 2 நாள்களாக வீட்டில் வைத்து பூட்டிவிட்டேன் என்று சொன்னால் சரியல்ல. எனது மனைவியின் அக்கா மற்றும் தம்பிகள் வந்து எனது வீட்டின் பூட்டை உடைத்து எனது மனைவியை காப்பாற்றி சென்றனர் என்றால் இல்லை, அப்போது தான் என்னை அடித்து வீட்டில் உள்ள சாமான்களை எடுத்துச் சென்றனர், என் குழந்தைகளையும் அழைத்துச் சென்றனர்.

10. என் மனைவியின் தம்பியும் அக்காவும் தான் எனது மனைவியை சிவகங்கை அரசு மருத்துவமனையில் 45 நாள்கள் தீவிர சிகிச்சை பிரிவில் வைத்து காப்பாற்றினார்கள் என்று சொன்னால் சரியல்ல. மருத்துவமனையில் இருந்து வீடு திரும்பிய எனது மனைவியை வீட்டில் நுழைய விடாமல் திருப்பி அடித்து வீட்டை பூட்டி விட்டேன் என்று சொன்னால் சரியல்ல. எனது வீட்டில் அவர்களுக்கு தங்குவதற்கு இடம் கொடுக்காததால் அவர் தேவகோட்டையிலேயே ஒரு வீடை வாடகைக்கு பிடித்து எனது மகன்களுடன் கஷ்ட ஜீவனம் நடத்தி வந்தார் என்று சொன்னால் சரியல்ல. எனது மனைவி சாப்பாட்டிற்க்காக அபிராமி ஹோட்டலில் பாத்திரம் கழுவியும் மாணிக்கம் நடுநிலைப்பள்ளியில் கூட்டிப்பெருக்கும் வேலை செய்து தனது மனைவி தனது

குழந்தைகளை காப்பாற்றி வருகிறார் என்று சொன்னால் சரியல்ல. எனக்கு பாகப்பிரிவினையில் கிடைத்த இடத்தில் எனது மனைவியில் நகைகளை விற்றும், மீதி நகைகளை அடமானம் வைத்தும் எனது மனைவியின் அம்மா, அக்கா, தம்பிகளிடம் பணம் ரூ.15 லட்சம் மதிப்பிலான தார்சு வீடு எனது மனைவி கட்டினார் என்றும் அதில் எனக்கு எந்த பங்கும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. அந்த அடமானக் கடன் மற்ற இதர கடனுக்கான வட்டியைக் கூட நான் செலுத்தவில்லை என்று சொன்னால் சரியல்ல, கடனை வாங்கவில்லை நான் தான் லோன் வாங்கி வீடு கட்டினேன். என் மனைவியும் பங்கு போட்டு கட்டியதால் எனது மனைவிக்கும் வீட்டில் பங்கு உள்ளது என்று சொன்னால் சரியல்ல, வீட்டுப்பத்திரமும் அவர் வசம் தான் உள்ளது.

11. நான் சொல்வது தவறு என்றும் நான் வீட்டுப்பத்திரத்தை வீட்டில் வைத்தால் வீட்டை விற்று பணத்தை ஜோதியிடம் தான் கொடுத்துவிடுவேன் என்பதால் தான் அந்த பத்திரத்தை எதிர்மனுதாரர் எடுத்துச்சென்றுள்ளார் என்று சொன்னால் சரியல்ல. என்னிடம் வீட்டுப்பத்திரம் கிடைத்து அந்த பத்திரத்தை விற்று விட்டால் என் மனைவியும் குழந்தைகளும் நடுரோட்டில் தான் நிற்பார்கள் என்பதற்க்காக என் மனைவி வீட்டுப்பத்திரத்தை தன்னுடன் வைத்துக்கொண்டார் என்று சொன்னால் சரியல்ல, அதை நான் விற்க முடியாது. என் மனைவி திருமணத்தின்போது கொண்டு வந்த சீர்சாமான் அனைத்தும் அவர் அம்மா வீட்டிற்கு எடுத்துச்செல்லவில்லை என்றும் அது அனைத்தும் என் வீட்டில் தான் என்னால் பூட்டி வைக்கப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல.

12.என் மனைவி என்னை விட்டு 3 வருடமாக பிரிந்து வாழ வில்லை என்றும் நான் தான் என் மனியுடம் சேர்ந்து வாழ வில்லை என்றும் அவரை நான் தான் வீட்டை விட்டு துரத்தி அடித்து விட்டேன் என்று சொன்னால் சரியல்ல. என் மனைவி கணவர் என்ற முறையில் எனக்கு அனைத்து பணிவிடைகளும் செய்தார் என்று சொன்னால் சரியல்ல, எனது இல்லற வாழ்க்கையை எந்த காலத்திலும் எனது மனைவி வீண் அடித்தது கிடையாது என்றும், என்னுடன் சேர்ந்து இல்லற வாழ்க்கை வாழ தான் என் மனைவிக்கு ஆசை என்று சொன்னால் எனக்கு அவருடன் வாழ விருப்பம் இல்லை.

13. என் மகன்கள் படிக்கும் பள்ளிக்கு சென்று நான் அவர்களை வலுக்கட்டாயமாக அழைத்துச்சென்றேன் என்ற சொன்னால் சரியல்ல. குழந்தைகளை திருப்பி

கூட்டிச்செல்வதற்காக என் மனைவி வீட்டிற்கு வந்தார் என்றும் அப்போது நான் அவரை அடித்து துரத்தினேன் என்று சொன்னால் சரியல்ல. இரண்டு மகனில் ஒரு மகன் யஷ்வந்தை மட்டும் என் மனைவி அழைத்துச் சென்றார் என்று சொன்னால் கோவிலுக்கு செல்லும் போது அவர் அவனை அழைத்துச் சென்றுவிட்டார், மற்றொரு குழந்தை என்னிடம் தான் உள்ளது என்றால் சரிதான்.

14. தேவகோட்டையில் உள்ள விதவை பெண்ணான ஜோதி என்ற பெண்ணுடன் ஏற்பட்ட கள்ள உறவால் என் மனைவியை அடித்து துண்புறுத்தி என் வீட்டில் இருந்து அடித்து விரட்டிவிட்டேன் என்றும், அந்த ஜோதியுடன் ரகசிய திருமணம் செய்து கொள்ள வேண்டும் என்பதற்காக என் மனைவியை நான் சேர்த்துக்கொள்ளவில்லை என்று சொன்னால் சரியல்ல. நான் என்னதான் என் மனைவியை அடித்து கொடுமைப்படுத்தி வீட்டை விட்டு வெளியே அனுப்பினாலும் என்னை விட்டு பிரிந்து என் மனைவி பிரிய வேண்டும் என்று துளி அளவும் நினைக்கவில்லை என்று சொன்னால் எனக்கு அவருடன் வாழ பிடிக்கவில்லை. அதனால் மனுவில் நான் கேட்டுள்ள எந்த பரிகாரமும் எனக்கு கிடைக்கதக்கது அல்ல என்றும் என் மனு தள்ளுபடிக்கு உரியது என்று சொன்னால் சரியல்ல.

**மறுவிசாரணை:** இல்லை.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

(ஓம்)– திருமதி.P.கலை நிலா, M.L.,
சார்பு நீதிபதி,
தேவகோட்டை.